செ.வெ.எண். 48 நாள்: 18.07.2019

**ஜீஜீவாடி அரசு மேல்நிலைப்பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறைகளை துவக்கி வைத்து 125 -- மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கனிணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 18.07.2019) வழங்கினார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் ஜீஜீவாடி அரசு மேல்நிலைப்பள்ளியில், நவீன தொழிற்நுட்ப வகுப்பை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்து 125 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிகனிணிகளை வழங்கினார்.

**பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசும் பொழுது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வித்துறைக்காக எண்ணற்ற நலத்திட்ட உதவிகளை வழங்கி செயல்படுத்தி வருகிறார்கள். அவற்றில் விலையில்லா பாடபுத்தகம், வண்ண சீருடை, புத்தகபை உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கி வருகிறார்கள். அதேப்போல நவீன தொழிற்நுட்பத்துடன் கூடிய ஸ்மார்ட் வகுப்புகள் இன்று துவக்கப்பட்டுள்ளன. இது மாணவ மாணவியர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் கல்வி தரம் எதிர் காலத்தில் சிறப்பாக அமையும். இப்பள்ளிக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி வேண்டும் என கோரிக்கை வைத்ததையடுத்து உடனடியாக செய்துகொடுக்கப்படும். மேலும் கூடுதலாக வகுப்பறை மற்றும் ஆய்வகம் வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளீர்கள், இக்கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று மட்டும் இப்பள்ளியை சேர்ந்த 125 ___ மாணவ மாணவியர்களுக்கு தலா ரூ.12 ஆயிரத்து 275 வீதம் மொத்தம் ரூ. 15 லட்சத்து 34 ஆயிரத்து 375 மதிப்பிலான மடிக்கனிணிகள் வழங்கப்பட்டுள்ளது. சிறப்பான முறையில் இக்மடிக்கனிணியை மாணவ மாணவியர்கள் சிறப்பாக பயன்படுத்தி தங்களில் கல்வித்தரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றினார்.

தொடர்ந்து 10 மற்றும் 12 ம் வகுப்பில் மாணவ மாணவியர்கள் அதிக மதிப்பெண் பெற ஊக்குவித்த ஆசிரிய பெருமக்களுக்கு கேடயங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கல்வி அலுவலர் திரு. ஆர். நரசிம்மன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் திரு.ராஜசேகர், திரு.அசோக்ரெட்டி, திரு.ஆனந்தரெட்டி, திரு.ஸ்ரீதர், திரு.ராமசந்திரப்பா, திரு.கணேசன், திரு.சீனிவாசரெட்டி, திரு.வெங்கடேஷ், திரு.ராஜசேகர், பள்ளி தலைமையாசிரியர் திருமதி. தேவசம்வர்த்தினி மற்றும் ஆசிரிய பெருமக்கள் மாணவ மாணவியர்கள் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.